செ.கு.எண்: 48.

நாள்: 01/02/2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை - 1.2.2012

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், தீத்தாம்பாளையம் கிராமத்தில் 30.1.2012 அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது கடலூரிலிருந்து சிதம்பரம் சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த காட்டுவராயன்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவசண்முகம் மற்றும் திரு. அய்யப்பன் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்தில் அகால மரணமடைந்த திரு. சிவசண்முகம் மற்றும் திரு. அய்யப்பன் ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான திரு. சிவசண்முகம் மற்றும் திரு. அய்யப்பன் ஆகியோரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு, இயக்குநர்,**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**சென்னை-9**